# பண்டைய இந்துக்களின் போரியல் மரபில் தலைப்பலி: ஒரு நோக்கு

**சற்குணலிங்கம் ஹோபிநாத்**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*பண்டைய இந்துக்களின் பண்பாட்டு மரபில் நிலவியிருந்த பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் சடங்கு முறைகளுள் மிகவும் ஆக்ரோஷமானதாகவும், உயிர்த்துடிப்பு மிக்கதாகவும் காணப்பட்ட அம்சம் பலியிடல் ஆகும். மக்கள் தமது வேண்டுதல்களை இறைவனிடத்தில் முன்வைக்கவும், அவை தீர்ந்தவுடன் அதற்கான நன்றியை இறைவனுக்குச் செலுத்தவும் விலங்குகளையோ அல்லது தம் உயிரையோ பலியிட்டுக் கொண்டனர். பலி என்பதற்கு 'கொடுத்தல்' என சமஸ்கிருதத்தில் பொருள்கொள்வர். அவ்வாறு இறைவனுக்குப் பலி செலுத்தப்படுவது போலவே, போரிலே மன்னர் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவும், தமது இலட்சியங்களில் வெற்றிபெறுவதற்காகவும் கூட பலி கொடுக்கப்பட்டன. வீரம் நிறைந்த மானிடர்கள் தமது உயர் இலட்சியங்களுக்காக, யுத்த களங்களிலே விலங்குகளைப் பலிகொடாமல் தங்களது சிரசினை தாங்களே தங்கள் கைவாளினால் அறுத்துக் களப்பலி கொடுத்தனர். அதுவே தலைப்பலி ஆகும். பெரும்பாலும் களப்பலியானது போர்த்தெய்வமாக விளங்கிய கொற்றவைக்கே கொடுக்கப்பட்டது. அவளுக்கு தங்கள் இரத்தத்தினால் அபிஷேகம் செய்து, தமது சரீரத்தைப் படையலாகக் கொடுத்து, திருப்திப் படுத்தி மன்னருக்கு வெற்றியைத் தருமாறு வேண்டினர். ஆண்கள் மாத்திரமின்றி, பெண்களும் தலைப்பலி கொடுத்ததுண்டு. இவ்வாறு கொடுக்கும் தலைப்பலியானது அரிகண்டம், நவகண்டம் எனப் பிரதானமாக இருவகையாக அமைகின்றது. இந்த ஆய்வானது பண்டைய இந்துக்களிடம் குறிப்பாகத் தமிழகத்தில் காணப்பட்டிருந்த உயிர்த்துடிப்புமிக்க அம்சமான தலைப்பலியிடல் மரபானது தொன்றுதொட்டு நிலவி வந்திருந்தமை பற்றித் தெளிவாக அறிதலை நோக்கமாக்கொண்டு வரலாற்றுமுறைமையிலும் இலக்கிய விவரணமுறைமையிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்வழி பின்வரும் செய்திகளை பெற்றுக்கொள்ள முடிகிறது. இதிகாசக் கதைகள், பழந்தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், மன்னர் செப்பேடுகள் மற்றும் திருமுறைப் பாடல்களிலும் கூட இத் தலைப்பலி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டின் கிராமப்புறங்களிலே இவை பற்றிய சிற்பங்கள் காணப்படுகின்றன. தமிழகக் கோயில்களிலும் இவ்வகைச் சிற்பங்களைக் காணமுடிகின்றது. இவ்வாறு தலைப்பலி கொடுத்த வீரரின் சிற்பத்தை நடுகல்லாக்கி அவனைத் தெய்வமாக வழிபடும் மரபு பண்டைத்தமிழர் பண்பாட்டில் காணப்பட்டது. இவ்வாறு பண்டைய இந்துக்களிடம் குறிப்பாகத் தலைப்பலியிடல் மரபானது தொன்றுதொட்டு நிலவி வந்திருந்தமை பற்றித் தெளிவாக அறிய முடிவதோடு, போரியல் மரபு சார்ந்த நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றை வெளிப்படுத்தும் அம்சமாகவும் அது விளங்கியது என்பதை அறிந்து கொள்ள இந்த ஆய்வு துணைபுரிகிறது.*


**திறவுச்சொற்கள்:** பலியிடல், தலைப்பலி, களப்பலி, அரிகண்டம், நவகண்டம்

[1] *சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.*
hobinaths@gmail.com

**அறிமுகம்**

உலகளாவிய பண்பாட்டுக் கூறுகளுள் போரும் ஒரு அம்சமாகவே அமைகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் திறமையை - வீரத்தை வெளிப்படுத்தவும், ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் போர் செய்வதையே பிரதானமாகக் கைக்கொள்கின்றனர். வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே தொடங்கிவிட்ட இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட போரே முதற்கட்ட போராக வர்ணிக்கப்படுகின்றது. இந்துப் பண்பாட்டு வரலாற்றில் வேதகாலம் குறிப்பிடத்தக்கது. 'வேதகால நாகரிகம் தொடர்ச்சியான போர்களின் மூலமாகக் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும்' (முகுந்தன்,ச., 2020:2). ரிக் மற்றும் அதர்வண வேதங்களில் போர் பற்றிய பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ள முடிகின்றது. அவ்வாறே இதிகாச – புராணங்கள் தர்மத்தை நிலைநாட்டுவதற்கான போர் பற்றிக் குறிப்பிடுகின்றன. அர்த்தசாஸ்திரம், திருக்குறள் முதலான பல்வேறு நூல்களும் போரியல் - அரசியல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

இந்துக்களின் வாழ்வியல் மரபானது மரபுகள், நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். அதில் சமய நம்பிக்கைகள் மிகவும் உணர்வு பூர்வமானவை. அவை உணர்ச்சிவசப்படக்கூடிய சடங்கு சம்பிரதாயங்கள் நிறைந்தவை. தமது எண்ணங்களையும், வேண்டுதல்களையும் இறைவனிடத்தில் முன்வைக்கவும், அவை தீர்ந்தவுடன் அவற்றுக்கான நன்றியை இறைவனுக்குச் செலுத்துவதற்கும் என பல்வேறு முறைகளைக் கையாண்டுள்ளனர். இதனை வானமாமலை அவர்கள், ''பண்டைய மக்கள் சடங்காசாரங்களை வாழ்க்கையில் நலன்களைப் பெற மிக அவசியமென கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய் - கிழங்குகள் கிடைக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துகள் நேராமல் இருக்கவும் நிகழ்த்தினர்'' என்று கூறுகிறார். (வானமாமலை,நா., 1973:91) அவற்றிலே பலியிடல் பிரதானமானதாகும்.

இந்து வழிபாட்டுச் சடங்குகளும் சம்பிரதாயங்களும் இடம், நேரம், தேவை எனப் பலவற்றின் அடிப்படையில் வெவ்வேறுபட்ட தன்மைகளோடு பல்கிப் பெருகிக் காணப்படும் நிலையில், பண்டைய இந்துக்களிடம் காணப்பட்ட வழிபாட்டு முறைகளைப் பட்டியற்படுத்துவது என்பது மிகவும் பரந்த ஒரு செயற்பாடாகும். கால அடிப்படையில் ஆராயும் போது அதன் தொடக்கம், தோற்றம் என்பன குறித்து தெளிவான சான்றுகள் கிடைக்கப்பெறுவதில்லை. அதனால் பலியிடல் தொர்பான சடங்குகளின் தோற்றம் எப்போது, எங்கே நிழந்தது என்பதை வரையறை செய்யமுடியாது.

இயற்கையோடு பின்னிப் பிணைந்து காணப்பட்ட இந்துக்கள் தாம் விரும்பியதை தமது தெய்வத்திற்குக் கொடுத்தனர். தம்மிடம் உள்ளதில் சிறந்ததை, தம் தெய்வத்திற்கு என்று

நேர்ந்து வைத்தனர். விருப்பத்தோடு வழங்கினர். தெய்வத்தைத் திருப்திப்படுத்தினால் தான், தாங்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்று நம்பினர். கண்ணுக்குக் கண், கைக்கு கை, காலுக்கு கால், பிள்ளைக்குப் பிள்ளை, உயிருக்கு உயிர் என்று ஒப்பந்தம் செய்தனர். அவ்வாறு வழங்கி, தமக்குத் தேவையானவற்றை வேண்டிப் பெற்றனர்.

**பலி கொடுத்தல்**

பலி கொடுத்தல் என்பது பொதுவாக நாட்டார் வழிபாடு, மற்றும் சக்தி வழிபாட்டில் பிரதான இடம்பெறும் முக்கியமான சடங்கு ஆகும். பொதுவாக கடுமையான நேர்த்திக்கடன்கள் பலிகொடுத்தலுடன் நிறைவேறுகின்றன. பழங்காலந்தொட்டே பலியிடல் மரபு நிலவிவந்துள்ளன. ஆகம மரபுசார் வழபாட்டிலும் பலியிடல் இடம்பெறுவதைக் காணலாம். பலி என்பதற்கு கொடுத்தல் என்று பொருள் வழங்கப்படுகின்றது. வேத காலத்திலும் பலியிடல் இடம்பெற்றிருந்ததை சான்றுகள் எடுத்தியம்புகின்றன. இதிகாச காலங்களில் யாகங்களின் போதும், போர்களின் முன்பும் பலியிடல், குறிப்பாக நரபலி கொடுத்தல் இடம்பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.

பலி கொடுத்தல் என்பதற்கு உயிர்ப்பலிகளை நமது வேண்டுதலின் பொருட்டு மேற்கொள்ளுதல் எனப் பலராலும் கூறப்பட்டாலும், பலி என்பது 'நம்மிடம் காணப்படுகின்ற விலங்குக் குணங்களை அழியச் செய்வதன் மூலம் இறைநெருக்கத்தை எட்டுதல்' என்பதாகும். இதன் பொருட்டே சிவாகம மரபிற்குற்பட்ட ஆலய அமைப்பில் பலிபீடம் இடம்பெறுகின்றது. எனினும், தாம் செய்த பாவத்தை மன்னிக்கவேண்டி, வேறொரு உயிரைப் பலியிடுதலும் மேற்கொள்ளப் பட்டது. யாமளம், மாத்ருதந்திரம் ஆகிய சாக்த ஆகமங்களும், சில வைதிக பாக யக்ஞங்களிலும் உயிர்ப்பலி பரிந்துரைக்கப்படுகிறது. தற்காலத்தில் வாஸ்து சாந்தியின் போது பூசணிக்காயை பலிகொடுப்பது, பூசைகளின் போது தேங்காய் உடைப்பது என்பன கூட பலியிடலில் மாற்றுப் பாவனையே எனலாம்.

**தலைப்பலி**

சக்தி வழிபாடான சாக்தநெறி மற்றும் நாட்டார் தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலி கொடுத்தல் சடங்கு பின்பற்றப்படுகிறது. குறிப்பாக நாட்டார் தெய்வ வழிபாட்டில் கருப்புசாமி, சுடலைமாடன், சுடலைவைரவர், பேச்சியம்மன், காடேறியம்மன், சுடலைக்காளி போன்ற பல தெய்வங்களுக்கு இரத்த பலியிடல் பிரதான அம்சமாக இடம்பெறுகின்றது. இத்தகைய பலியிடல் நிகழ்வுகள் அனைத்திலுமே தலைப்பலியே கொடுக்கப்படுகின்றது. அதாவது எந்த விலங்காக அல்லது பறவையாக இருந்தாலும் அதன் கழுத்து அறுக்கப்பட்டு, தலை துண்டிக்கப்படுவதே பலிகொடுத்தலில் பிரதானமாக விளங்குகின்றது. அவ்வாறே

தெய்வசன்னதம் வந்து ஆடுபவர்கள் சேவல்களின் கழுத்தைத் தமது பற்களால் கடித்துக் குதறி, அதன் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தே பலியெடுப்பர்.

இங்கு, ''ஓர் உயிரைக் கொடுப்பதன் மூலம், இன்னொரு உயிர் காப்பாற்றப்படுகிறது; பாதுகாக்கப்படுகிறது; வளம் பெறுகிறது;'' என்ற நம்பிக்கையே பலியிடலுக்கு அடிப்படையாக அமைகிறது. பலியிடலின் வாயிலாக இயற்கையையும், தெய்வங்களையும் திருப்திப்படுத்தவும், வசப்படுத்தவும் முடியும்; என்று மக்கள் நம்புகின்றனர். தெய்வங்களுக்கு ஆட்டுக்கிடாய் பலியிடப் பட்டதையும்,[1] குருதி கலந்த உணவு படைக்கப்பட்டதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

போரியல் மரபில், போர் ஆரம்பிக்கும் முன்னர் வீரர்கள் காளியின் சிலைக்கு முன்னால் தலையை அறுத்து நவகண்டம் கொடுப்பது தமிழ் நாட்டிலும் கர்நாடகத்திலும் நடந்திருந்தமையைச் சான்றுகள் மூலம் தெளிவாக கண்டுகொள்ள முடிகின்றது. சங்க இலக்கிய காலந்தொட்டே, தலைப்பலி தொடர்பான செய்திகள் காணப்பெற்றாலும், குறிப்பாக 9 – 13ஆம் நூற்றாண்டு வரையான சோழப் பேரரசர் காலத்திலேயே இம்மரபு உச்சநிலை அடைந்திருந்தது எனலாம். அந்தவகையில் போரியலில் வழங்கபட்ட தலைப்பலிகளை அரிகண்டம், நவகண்டம் என வெவ்வேறாகப் பகுத்துப் பார்க்கலாம்.

**அரிகண்டம்**

அரிகண்டம் என்பது தன் கழுத்தை தானே அறுத்து பலியிட்டுக் கொள்வதாகும். இம் மரபு தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. கொற்றவையின் முன்பாகத் தன் வேண்டுதலை நிறைவேற்ற தலையை அறுத்துப் பலியிட்டு கொண்டவர்களைப் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன, குறிப்பாக கலிங்கத்துப்பரணியில் சோழ அரசின் வெற்றிக்காக இப்படி தலையை அறுத்து பலிகொண்ட வீரனைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. இது போலவே தண்டனையாகவும் தன் தலையைத் தானே அறுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.

ஒரு விழாவினைப் போல இந்நிகழ்வு நடைபெறும். அரிகண்டம் கொடுப்பதற்கு முன் வீரனுடைய உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுவர். அரிகண்டம் கொடுப்பவர் இடையில் உடைவாளும், மார்பில் கவசமும் தரித்து போர்வீரன் போல் போர்க்கோலம் பூண்டிருப்பார்.

[1].பொதுவாக பலியிடல் வழக்கங்களில் ஆண் உயிரினங்களே பலிகொடுக்கப்படுகின்றன. ஆட்டுக்கிடாய், சேவல் என்பவற்றைக் குறிப்பிடலாம். எனினும் சில சந்தர்ப்பங்களில் கருவுற்ற பெண் விலங்குகளைப் பலிகொடுக்கும் வழமையும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதனை **சூல் பலி** என்பர். பொதுவாகப் பெண்கள் உற்பத்திக்கும், பெருக்கத்திற்கும் அவசியம் எனக் கருதுவதால் அவ்வாறு தவிர்த்திருக்கலாம். அதேபோல் வீரத்தன்மையோடு பலிகொடுக்க வேண்டும் என்பதால் ஆண் உயிரினங்களைப் பலி கொடுத்திருக்கலாம் எனக் கருதலாம்.

கொற்றவைத் தெய்வத்திற்கு பூசை முடித்த பின்பு, தனது இடது கையினால் முடியைப் பிடித்து வலது கையினால் கழுத்தை வெட்டிக் கொண்டு இறப்பார். இவ்வாறு தலைப்பலி கொடுப்பதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்பட்டன.

- வலிமையான எதிரி நாட்டுடன் போர்புரிய நேரும் போது போரில் வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்ற தருணங்களில், போரில் வெற்றி கிடைக்க வேண்டும் என்று துர்க்கைக்குப் பலி கொடுத்தால் அவளின் அருள் கிட்டும். அதனால் போரில் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையில் தலைப்பலி கொடுக்கப்பட்டது.
- சில சமயங்களில் உடல்நலம் குன்றி, படுக்கையில் கிடக்கும் அரசனுக்கு, அவன் பூரண நலம்பெற வேண்டி அவனது விசுவாசிகளினால் தலைப்பலி கொடுக்கப்பட்டது.
- நோயினால் சாவினை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஒருவன், நோயினால் சாக விரும்பாமல், வீர சொர்க்கம் அடைய விரும்பி தலைப்பலி கொடுத்துக் கொண்டு வீரச்சாவு அடைவதும் உண்டு.
- குற்றவாளி ஒருவன் தான் செய்த குற்றத்தினால் மரண தண்டனைக்கு உள்ளாகும் போது, அவ்வாறு சாகாமல் அரசனின் அனுமதியுடன் களப்பலி கொடுத்து வீரசுவர்க்கம் அடைவதுண்டு.
- ஒருவன் போரில் விழுப்புண்பட்டோ அல்லது நோயினாலோ சாகும் தருவாயில் அவனுக்கு பூர்த்தி செய்ய வேண்டிய கடமைகள் ஏதும் இருப்பின், தனது இறப்பினை தள்ளிப் போடுமாறு இறைவனிடம் வேண்டிக் கொண்டு, அப்படி நடக்கும் பட்சத்தில் அந்தக் கடமை நிறைவேறியதும், தன்னைப் பலிகொடுத்துக் கொள்வதும் நிகழ்ந்தது.
- அவ்வாறே கோட்டைகள், கோயில்கள் போன்ற கட்டுமானங்களைக் கட்டத் தொடங்கும் போதும் தலைப்பலி தரப்பட்டதை அறிந்து கொள்ளலாம்.
- முன்பு சோழர்களுக்கு "வேளக்கார படைகள்" என்றும், பாண்டியர்களுக்கு "தென்னவன் ஆபத்துதவிகள்" என்றும் இருவிதமான படைகள் இருந்தன. தங்களுடைய கவனக்குறைவினாலோ, தங்களை மீறியோ, அரசர் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால், துர்க்கையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

இந்த முறையில் தலைமுடியை ஒரு கையால் பிடித்துக் கொண்டோ அல்லது ஓரிடத்தில் இழுத்துக் கட்டியோ, மறுகையால் வாள் கொண்டு கழுத்தினை அறுத்துப் பலி தந்தனர்.

அவ்வாறு உயிர்நீத்த வீரர்களின் சந்ததியினருக்கு மன்னர்களால் நிலம் தானமாக வழங்கப்பட்டது. இதை 'உதிரப்பட்டி' என்பர்.[2] தலைப்பலி கொடுத்து இறந்தவர்களை

[2]. **உதிரப்பட்டி** என்பது போரில் உயிர் இழந்த போர் வீரர்களின் குடும்பங்களுக்கு வீரர்களைப் போற்றும் வகையில் அவர்களது குடும்பத்தாருக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலப்பகுதியாகும். தமிழக வரலாற்றில்

‘சாவான்சாமி’ என தமிழக கிராமங்களில் தெய்வமாக வணங்குகின்றார்கள். இன்றும் ஈரோடு, சென்னிமலை, திருச்செங்கோடு, கபிலர்மலை, மதுரை, திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் “சாவான் சாமி” கோயில்கள் காணப்படுகின்றன.

அவ்வாறே, தமிழ் மரபில் புலவர்கள் தங்களுடைய திறனை நிரூபனம் செய்துகொள்ள தங்களுக்குள் பல்வேறு போட்டிகளை வைத்துக் கொண்டனர். அதில் அரிகண்ட வகைப் போட்டியிலும் ஈடுபட்டிருந்ததனைக் காண முடிகின்றது. அதிலே, கழுத்தில் கத்தியினைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருப்பர், போட்டிக்கு கொடுக்கப்படும் பொருளில் அவர் கவி பாட வேண்டும். அதில் தவறும் பட்சத்தில், அந்த கத்தியினால் தன்னுடைய கழுத்தினை அரிந்து கொண்டு இறக்க வேண்டும் என்ற நியதி காணப்பட்டிருந்தது. இவ்வாறே புலவர்கள் யமகண்டம்[3] என்றொரு போட்டியிலும் பங்கேற்றுள்ளனர்.

**நவகண்டம்**

நவகண்டம் என்பது, தன்னுடைய உடலில் உள்ள ஒன்பது நாளங்களையோ, ஒன்பது உடல் பாகங்களையோ அறுத்துத் தன்னையே பலி கொடுத்துக் கொள்வதாகும். தமிழகத்தில் 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 13ம் நூற்றாண்டு வரையான காலகட்டத்தில் இவ்வாறு நவகண்ட முறையில் பலி கொடுத்துக் கொள்ளும் முறை இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. இவர்கள் பொதுவாகக் கொற்றவைத் தெய்வத்திற்கே தம்மைப் பலியிட்டுக் கொண்டுள்ளனர். இந் நவகண்டப் பலியைப் பற்றி கோயிற் கல்வெட்டுகள், சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி போன்ற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

கொற்றவைக்கு அவ்வாறு பலியிட்டுக் கொள்பவர்கள் கூரிய வாளால் தங்கள் உடலை ஒன்பது பாகங்களாக அரிந்துகொண்டு இறுதியாகத் தன் தலையைத் தானே அறுத்துக்கொள்வர். இதனை வெளிப்படுத்தும் நவகண்ட சிற்பங்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணமுடிகிறது.

---

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி காலங்களில் நிலம் கொடையாக கொடுக்கும் இந்த வழக்கம் இருநதுவந்துள்ளது.
இவ்வாறு வழங்கப்பட்ட இடங்கள் இறையிலி, இரத்தகாணி, உதிரப்பட்டி, நெய்த்தோர் பட்டி, என்றும் அழைக்கப்பட்டன. பெருங்கதையில் நெய்த்தோர்பட்டிகை என்றும் குறிக்கப்படுகிறது. உதிரம் என்ற சொல்லுக்கு இரத்தம் என்று பொருள். போரில் ரத்தம் சிந்தியவர் என்ற பொருளில் உதிரப்பட்டி என்று அழைக்கப்படுகிறது. திருமய்யம் அருகே தேவமலை என்ற ஊரில் உள்ள குடபோகக் கோவிலருகில் உள்ள பாறைக் கல்வெட்டு உதிரப்பட்டியாக வழங்கப்பட்ட நிலங்களைப் பற்றி குறிப்பிடுகிறது.

[3]. யமகண்டம் என்பது உறியை மேலே கட்டி, கீழே தீ மூட்டி, எட்டுக் கத்திகளை ஒருவரின் மீது பாய்ச்சுவதற்கு யானைகள் துணையுடன் அமைக்கப்படும் அமைப்பாகும். இந்த அமைப்பை தலைக்கு மேல் கத்தி, உடலுக்கு கீழ் நெருப்பு என சுட்டுகின்றனர். இந்த யமகண்ட முறையில் பல்வேறு சமயங்களில் பாடகர்கள் தங்களுக்குள் போட்டியை வைத்துக் கொண்டு பாடியுள்ளார்கள். இந்த யமகண்டத்தில் பாடிய புலவர்களில் காளமேகப் புலவர் குறிப்பிடத்தக்கவர். அபிராமி அந்தாதியை பாடிய அபிராமிப் பட்டரும் இந்த யமகண்டத்தில் நின்று பாடியுள்ளார்.

## தலைப்பலிச் சிற்பங்கள்

பழங்காலத்தில் மன்னர்கள் போரில் வெற்றிபெறவும், அவர்கள் நலம் பெறவும், தாங்கள் எடுத்துக்கொண்ட முக்கிய நலப்பணித் திட்டங்கள் எவ்விதத் தடங்கலுமின்றி நடந்தேறவும் போர்வீரர்கள் கொற்றவை தெய்வத்தின் முன், தங்களைத்தாங்களே பலியிட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்துள்ளதை சிற்பங்கள், நடுகற்கள், கல்வெட்டுகள் போன்ற ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. இதனை கல்வெட்டுகள் "தூங்கு தலை குடுத்தல்'' எனக் குறிப்பிடுகின்றன.[4]

''வீங்குதலை நெடுங்கழையின் விசைதொறும்

திசைதொறும் விழித்துநின்று தூங்கு தலை..'' (கலிங்கத்துப்பரணி: 117)

எனும் பாடலும் இதற்குச் சான்றாகும்.

தமிழகத்தில் இந்த தலைப்பலிச் சிற்பங்கள் பல்வேறு கோயில்களில் காணப்படுகின்றன. சில சிற்பங்கள் கோயில்களில் அல்லாமல் வெட்டவெளியில் இருக்கின்றன.

இச்சிற்பங்களில் பெரும்பாலும் அமர்ந்த, நின்ற அல்லது முழங்காலிட்ட நிலையில் இருக்கும் வீரன், தனது ஒரு கையால் தலைமுடியை பற்றிக்கொண்டு, மறு கையிலுள்ள வாளால் தன் தலையை வெட்டுவது போன்ற அமைப்பில்தான் இருக்கும். சிலவற்றில் வீரனின் ஒரு கையிலுள்ள வாள் கழுத்திலும், மற்றொரு கையிலுள்ள வாள் நிலத்தில் ஊன்றி இருப்பது போன்றும் இருக்கும். வாளினை வளைத்து பின்கழுத்தில் இரு கைகளாலும் வெட்டுவது போன்ற சிற்பங்களும் கிடைத்துள்ளன.

பாண்டிய நாட்டில், சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், மல்லல், குன்றக்குடி, விருதுநகர் மாவட்டம் மன்னார்கோட்டை, மதுரை மாவட்டம் தென்கரை, திண்டுக்கல் மாவட்டம் பழநி, அம்மையநாயக்கனூர், ராமநாதபுரம் மாவட்டத்தில் செம்பிலான்குடி ஆகிய இடங்களில் இச் சிற்பங்கள் கிடைத்துள்ளன.

- செம்பிலான்குடியில் உள்ள நவகண்ட சிலையில் மேலே கல்வெட்டும், கீழே பீடமும், நடுவில் வீரனின் புடைப்புச்சிற்பமும் உள்ளன.
- திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு அருகே உதயேந்திரம் எனும் ஊரில் கி.பி 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தலைப்பலிச் சிற்பம் காணப்படுகின்றது.

[4]. *''தூங்கு தலை கொடுத்தான் சித்திரசரிதன்''*
*''தூங்கு தலை கொடுத்தான் வல்லபன்''*
எனும் குறிப்புகள் சிவகங்கை மாவட்டம் திருப்பூவணம் வட்டத்தில் உள்ள மடப்புரம் காளியம்மன் கோயிலில் காணப்படும் நவகண்டச் சிற்பங்களின் கீழே எழுதப்பட்டுள்ளன.

- திருவாசி மாற்றுரைவரதீசுவரர் கோயிலின் பிரகாரத்தில் கன்னிமார் சிலைகளுக்கு அருகே நவகண்டச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.
- திருமுக்கூடலூர் அனலாடீசுவரர் கோயில் முன்பு தலை சிதைந்த நிலையிலுள்ள நவகண்டச் சிற்பம் அமைந்துள்ளது.
- மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் வழியில் மதுரையிலிருந்து 18கி.மீ. தூரத்தில், வைகை ஆற்றின் தென்கரையில் திருப்பூவணம் (திருப்புவனம்) எனும் ஊரில் புதூர் என்ற பகுதியில், நவகண்டம் கொடுக்கும் சிற்பம் ஒன்று உள்ளது.
- பழநி பெரிய நாயகியம்மன் கோயில் அருகே உள்ள விநாயகர் கோயிலில் நவகண்டச் சிலை உள்ளது.
- கொங்கு நாட்டுச் சிவன் கோவில்களில் நவகண்டச் சிற்பங்கள் காணப்படுகின்றன.
- அத்தனூர் அம்மன் கோவில் (ராசிபுரம்), சிங்களாந்தபுரம் சந்தைப்பேட்டை, புதுப்பாளையம் முப்பீஸ்வரர் கோவிலில் மூன்று நவகண்ட சிற்பங்கள் காணப்படுகின்றன.
- தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்திலிருந்து கிழக்கே 4 கி.மீ. தொலைவிலுள்ள பெண்ணேசுவர மடம் கோயிலின் முன்புறம் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நவகண்ட சிற்பம் காணப்படுகின்றது.
- காரைக்குடிக்கு மேற்கே 9.கி.மீ. தொலைவில் உள்ள குன்றக்குடி எனும் ஊரிலுள்ள குடைவரைக் கோயிலிலுள்ள எழில்மிக்க கொற்றவை சிற்பத்தின் வலப்புறத்தே வீரன் ஒருவன் ‘‘நவகண்டம்’ அளிக்க, தன் வலக்கையால் வாளை ஏந்தி அடிக்கழுத்தில் நெடுஞ்சிரத்தை அரியும் நிலையில் காட்டப்பட்டுள்ளது.
- மேலும் கொற்றவைக்கு தலையை அரிந்து கொடுக்கும் சிற்பங்களை மகாபலிபுரம் – திரௌபதி ரதத்திலும், சிங்கவரம் குன்றத்திலும், திருவானைக்காவிலும் காணலாம்.

## சாசனங்களில் தலைப்பலிச் செய்திகள்

தமக்காகக் தலைப்பலி கொடுத்து வீரச்சாவடைந்த வீரர்களை மன்னர்கள் போற்றி அவர்பொருட்டு கல்வெட்டுக்களையும் பொறித்திருந்தார்கள். கம்பவர்மன்[5] காலத்து 20வது ஆட்சியாண்டிற்குரிய திருவான்மூர் நடுகல் ஒன்றில்,

‘‘ஸ்ரீகம்ப பருமற்கி யாண்டு இருபதாவது
பட்டை பொத்தவனுக்கு ஒக்கொண்ட நாதன்
ஒக்கதிந்தன் பட்டை பொத்தன் மேதவம்
புரிந்ததென்று படாரிக்கு நவகண்டம் குடுத்து

[5]. கம்பவர்மன் (பொ.நூ 850 – 882) பல்லவ மன்னர்களுள் ஒருவன். மூன்றாம் நந்திரவர்மனுக்கும், பழுவேட்டரையரின் புதல்வி - கந்தன் மாறம்பாவையருக்கும் பிறந்தவன். அபராஜிதவர்மனின் தந்தையார்.

குன்றகத் தலை அறிந்துப் பிடலிகை மேல்
வைத்தானுக்கு
திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது
எமூர்ப் பறைகொட்டக்
கல்மேடு செய்தராவிக்குக் குடுப்பாரானார்
பொத்தனங் கிழவர்களும் தொறுப்பட்டி நிலம்
குடுத்தார்கள்
இது அன்றென்றார்
கங்கையிடைக் குமரி இடை எழுநூற்றுக் காதமும்
செய்தான் செய்த பாவத்துப் படுவார்
அன்றென்றார் அன்றாள் கோவுக்கு
காற்ப்பொன் றண்டப்படுவார்'' (கம்பவர்மனின் திருவாமூர்ச் சாசனம்)

அதாவது, ''பட்டை பொத்தன் என்பவனின் வெற்றிக்காக ஒக்கொண்டநாகன் ஒக்கதித்தன் என்பவன், தன்னுடைய தலையை அறுத்துப் பிடாரியின் பீடத்தில் வைத்தான். அவனுக்கு திருவான்மூர் மக்கள் பறைகொட்டி, கல் நட்டு, சிறப்புச் செய்தார்கள். நிலமும் கொடையாக அளிக்கப்பட்டது. இக்கொடைக்கு ஊறு செய்வோர் கங்கைக்கரை முதல் குமரி வரையுள்ள மக்கள் செய்த அனைத்து பாவங்களையும் பெறுவார்கள். மேலும் மன்னனுக்கு காற் பொன் அபராதமும் கட்ட வேண்டும்'' என்ற செய்தி காணப்படுகின்றது.

கொங்கு நாட்டில், தங்கள் நாட்டு மன்னன், போரில் பகைவர்களை அழித்து வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத் தங்கள் தலையை வெட்டி, வெற்றித் தெய்வமாகிய காளிக்கு காணிக்கையாக்கும் வழக்கம் இருந்துள்ளது. கி.பி. 1265 – 1285 காலப்பகுதியில் ராஜகேசரிவர்மன் எனப்படும் வீரபாண்டித் தேவரின் கல்வெட்டுகள் இதற்கு ஆதாரமாக உள்ளன. அவ் வழக்கத்தின்படி பெண்களும் தங்களைக் களப்பலி கொடுத்துள்ளனர். தமிழ்நாட்டின் அந்தியூர் ஸ்ரீபத்திரகாளியம்மன் திருக்கோவிலில் தலைப் பலி கொடுக்கும் வீரப்பெண்மணிகளின் சிலைகள் காணப்படுகின்றமை இதற்குச் சான்றாகும்.

அம்பலக்கூத்தன் என்ற வீரன், தன் படைத் தலைவனின் நோய் குணமாக நவகண்டம் கொடுத்துள்ளதை முதலாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது.

விஜயாலயன் கல்வெட்டு ஒன்றில் நிசும்பசூதனி என்ற கொற்றவைக்கு கோவில் எடுத்த செய்தியும், அதற்கு பலி கொடுத்ததையும் கல்வெட்டு சொல்லுகிறது.

கல்வெட்டு பொறிக்கப்படாத நவகண்டக் கற்கள் கரூர், பேரூர், அவினாசி, ஆறூர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. இந்த சிற்பங்கள் எவற்றிலும் எழுத்துக்கள் இல்லை என்பதால் அவர்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை.

**இலக்கியங்களில் தலைப்பலிச் செய்திகள்**

தொல்காப்பியம், மணிமேகலை, கலிங்கத்துப் பரணி ஆகிய பழந்தமிழ் நூல்கள் பலவற்றிலும் இத் தலைப்பலி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் எடுப்பது சங்க இலக்கிய காலம் தொட்டு தமிழர் மரபாக போற்றப்பட்டுள்ளது, பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் நடுகல் அமைக்கும் முறை பற்றி கூறப்பெற்றுள்ளது. அதைப்போல தலைவனின் வெற்றிக்காக கொற்றவையின் முன்பு தன் தலையை கொடுக்கும் வீரர்கள் பற்றிய குறிப்புகளை தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இலக்கண - இலக்கியங்களில் காண முடிகின்றன.

நாட்டுக்காக உயிர் துறத்தலை 'அவிப்பலி' (தொல் - புறத்திணையியல்:17) என தொல்காப்பியம் கூறுகிறது. நவகண்டம் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி போன்ற நூல்களில் காணப்படுகின்றன.

"அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ,
அரிந்த சிரம் அணங்கின் கை கொடுப்பராலோ,
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ,
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ."

என்கிறது கலிங்கத்துப் பரணி. (சுப்புரெட்டியார்.ந., 1957:108)

அரச விசுவாசிகளான படைவீரர்கள் தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்வதற்கான பலிபீடங்கள் பட்டினப்பாக்கத்தில் இருந்தமையை இளங்கோவடிகளின் கீழ்கண்ட பாடலின் மூலம் அறியமுடிகிறது:

"வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலியூட்டி" (இந்திர விழவூரெடுத்த காதை : 85 – 88)

மேற்கண்ட அடிகள் மூலம் வீரார்கள் தமது தலையைத் தாமே வெட்டி பலிபீடத்தில் வைப்பதைக் குறிப்பிடுகின்றன.

இதிகாசங்களிலும் தலைப்பலி கொடுத்தமை பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. இராமாயண காலத்தில் இலங்கையில் இந்த வழக்கம் இருந்ததை, இராவணனின் புதல்வர்களான மேகநாதன், இந்திரஜித் ஆகியோர் நிகும்பிளா குகையில் நடத்திய சடங்குகள் காட்டுகின்றன. அவ்வாறே, மகாபாரதப் போர் தொடங்குவதற்கு முன்னால் அர்ஜுனன் – உலூபி என்போரின் மகனாகிய அரவான் களப்பலி கொடுக்கப்பட்டமை மிகச் சிறந்த சான்றாகும்.[6] இன்றும் அரவானின் களப்பலி நிகழ்வானது ஒரு சமுதாயத்தின் பெருவிழாவாக அனுட்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மன்னர்கள், பிரதானிகள் போன்றோர் தமது கருவூலங்களைப் பாதுகாப்பதற்கு தமது வீரர்களை தலைப்பலி கொடுத்து, காவலுக்கு நிறுத்தினர் என்ற செய்தியும் அறியப்படுகின்றது.

## நிறைவுரைக்குப் பதிலாக

இவ்வாறு பண்டைய இந்துக்களிடம் குறிப்பாகத் தமிழகத்தில் காணப்பட்டிருந்த உயிர்த்துடிப்புமிக்க அம்சமான தலைப்பலியிடல் மரபானது தொன்றுதொட்டு நிலவி வந்திருந்தமை பற்றித் தெளிவாக அறிய முடிவதோடு, அது போரியல் மரபு சார்ந்த நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றை வெளிப்படுத்தும் அம்சமாகவும் விளங்கியது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இன்றளவும் இதே தலைப்பலியிடல் ஆங்காங்கே பல்வேறு தேவைகளுக்காக, குறிப்பாக புதையல் எடுத்தல், அதீத சக்திகளைப் பெறல் போன்ற நம்பிக்கைகளின் பொருட்டு மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதனையும் காணலாம்.

## உசாத்துணை


காசிநாதன், நடன., (2009), கல்வெட்டு ஓர் அறிமுகம், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை.

சுப்புரெட்டியார், ந., (1957), கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, செல்விபதிப்பகம், காரைக்குடி.

முகுந்தன், ச., (2020), புராதன இந்து சமுதாயத்தில் போரியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

வானமாமலை, நா., (1973), தமிழர் பண்பாடும் தத்துவமும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், சென்னை.


[6]. *''மெய் வரு காளி முன்னர், மெய் உறுப்பு அனைத்தும் வீரன், கொய்வரு நிலையில் கொய்து கொடுத்தனன் என்ப மன்னோ''* என்று அரவானின் களப்பலியை வில்லி பாரதம் பேசுகிறது.

**இணையத்தளங்கள்**

https://www.tamilvu.org/slet/ln00101/ln00101pag.jsp?bookid=307&pno=385

https://ta.wikipedia.org/s/1bs2